



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருமுருகன்பூண்டி, ராக்கியாபாளையத்தில் கலைஞர் அறிவாலயத்தை மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் கிருஷ்ணசாமி (எ) மூர்த்தி நகர் மன்ற தலைவர் குமார் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், நகர கழக துணைச் செயலாளர் தேஜஸ் மூர்த்தி, பொருளாளர் அப்பாஸ், மாவட்டப் பிரதிநிதி மாணிக்க மூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர்கள் சுஜினி சதீஷ்குமார், மதிவாணன், ராஜன், வார்டு செயலாளர் சிவக்குமார் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருமயம் தொகுதி சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மாணவ, மாணவிகள் அனிதா, ராமச்சந்திரன், திருவாசகம், ஜலாலுதீன், முரசொலி மாறன், செல்வகுமார் ஆகியோருக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அழகு.சிதம்பரம், ஆர்.கணேசன், கலை, இரா.மேகநாதன், அருண்சேகர், ஜான் பீட்டர், முல்லை ரமேஷ், சாமி சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டையில் ஒன்றிய அரசின் VBGRamG சட்டத்தை திரும்பப்பெற வேண்டியும்!

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை மீண்டும் அமல்படுத்த கோரிக்கை!

## மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல் - 200 க்கும் மேற்பட்டோர் கைது!

திருப்பூர், ஜூலை 3 - ஒன்றிய அரசின் வி பி கிராம்ஜி சட்டத்தை திரும்பப்பெற வேண்டியும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை மீண்டும் அமல்படுத்த கோரியும் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைக்கான சங்கம் சார்பில் தங்கள் கோரிக்கையில் நிறைவேற்ற கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைக்கப் பட்டனர்.

VBGRamG, கருவிழி கைரேகை கட்டாயம் என்ற சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை மத்திய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைக்கான சங்கம் சார்பில் VBGRamG சட்டத்தை ரத்து செய், காந்தி பெயரிலான 100 நாள் வேலை திட்டத்தையே தொடர்ந்து அமல்படுத்து, திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை 4 லட்சம் கோடியாக உயர்த்தி வழங்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை நாளை 200 ஆகவும், சம்பளத்தை 700 ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கு, விண்ணப்பித்த மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உடனடியாக உதவித்தொகையை வழங்க வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.3000 ஆகவும், கடும் ஊனமுற்றவர்களுக்கு ரூ.6000 ஆகவும் வழங்க வேண்டும். தமிழகத்தில் உள்ள சுற்றுலா தளங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் சென்றுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு மாலினி தலைமை தாங்கினார். உடுமலைப்பேட்டை தாலுகா செயலாளர் பாலசுப்ரமணியம், திருப்பூர் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி, சிஐடியு செயலாளர் ஜெகதீசன், வி.தொ.ச செயலாளர் கனகராஜ், மாதர்சங்க சசிகலா ஆகியோர் உரையாற்றினர். மறியலில் பங்கேற்ற 200 பேரை போலீசார் கைது செய்து தனியார் மண்டத்தில் தங்க வைத்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

### வர்த்தக காஸ் சிலிண்டர் விலை ரூ.177 குறைப்பு!

# வீட்டு சிலிண்டர் விலையில் மாற்றமில்லை!

## இல்லத்தரசிகள் ஏமாற்றம்!

சேலம், ஜூலை 3 – நாடு முழுவதும் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக காஸ் சிலிண்டர் விலை நேற்று ரூ.172.50 முதல் ரூ.177 வரை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் வீட்டு உபயோக சிலிண்டர் விலை குறைக்கப்படாததால் இல்லத்தரசிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சர்வதேச சந்தையின் கச்சா எண்ணெய் விலை நிலவரம், இறக்குமதி செலவு, அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர் உள்ளிட்ட எரிபொருட்களின் விலையை, இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்பு நிர்ணயித்து வருகிறது.

இதில், காஸ் சிலிண்டர் விலை மாதந்தோறும் 1ம் தேதி மாற்றியமைக்கப்படுகிறது. ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேல் போர் காரணமாக கச்சா எண்ணெய் இறக்குமதி கடுமையாக பாதிக்கப்பட்டதால் கடந்த சில மாதங்களாக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டு வந்தது. கடந்த மாதம் 1ம் தேதி வர்த்தக காஸ் சிலிண்டர் விலை ரூ.990 முதல் ரூ.1000 வரை அதிகரித்தது. இந்த அதிரடியான விலை உயர்வு நாடு முழுவதும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதேசமயம், வீட்டு உபயோக சிலிண்டர் விலை கடந்த மாதம் 7ம் தேதி ரூ.29 உயர்ந்தது. அதன்படி டெல்லியில் ரூ.942, மும்பையில் ரூ.941.50, கொல்கத்தாவில் ரூ.968, சென்னையில் ரூ.957.50, சேலத்தில் ரூ.975.50 என விநியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் நடப்பு மாதத்திற்கான (ஜூலை) காஸ் சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் கூட்டமைப்பு நேற்று அதிகாலை வெளியிட்டது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளதால் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக காஸ் சிலிண்டர் விலை குறைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் வர்த்தக சிலிண்டர் விலை ரூ.172.50 முதல் ரூ.177 வரை குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த மாதம் சென்னையில் ரூ.3,283.50 ஆக இருந்த நிலையில் இன்று ரூ.177 குறைந்து ரூ.3,106.50 ஆகவும், சேலத்தில் ரூ.3,230.50 ஆக இருந்தது ரூ.177 குறைந்து ரூ.3,053.50 ஆகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இதுவே டெல்லியில் ரூ.2936.50, கொல்கத்தாவில் ரூ.3,078.50, மும்பையில் ரூ.2,890, பெங்களூரில் ரூ.3,026 ஆக குறைந்துள்ளது.

ஆனால் வீட்டு உபயோக சிலிண்டர் விலை குறைக்கப்படவில்லை. ஈரான் அமெரிக்கா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பெருமளவு குறைந்துள்ளது. இதனால் வீட்டுசிலிண்டர் விலை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விலை குறைக்கப்படாததால் இல்லத்தரசிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

★ பெட்ரோல், டீசல் விலை குறைப்பு எப்போது?

ஈரான்அமெரிக்கா போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 100 டாலரை தாண்டியது. இதனால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை ரூ.8 வரையில் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது இருநாடுகள் இடையே போர் ஒப்பந்தம் காரணமாக கச்சா எண்ணெய் விலை 73 டாலராக குறைந்துள்ளது. இதனால் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதுபற்றி எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. இதனால் ஏமாற்றமே மிஞ்சி உள்ளது. கத்தாரின் தோஹாவில் நடைபெற்று வரும் உயர் மட்ட அமைதிப் பேச்சுவார்த்தையில், அமெரிக்க தூதர்களுடன் நேரடியாகப் பேச ஈரான் மறுத்துள்ளதால் சந்தையில் ஒருவித நிச்சயமற்ற சூழல் நிலவுகிறது. இதன் காரணமாகவே விலை குறைக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

★ 200 லிட்டர் கட்டுப்பாடு நீக்கம்

மேற்கு ஆசியாவில் நிலவிய போர் பதற்றம் காரணமாக சில்லறை விற்பனை நிலையங்களில் ஒரு வாகனத்திற்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 200 லிட்டர் டீசல் மட்டுமே வழங்க வேண்டும், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்களுக்கும் இது பொருந்தும் என கடந்த ஜூன் 12ம் தேதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. தற்போது சர்வதேச கச்சா எண்ணெய் விநியோகம் சீரடைந்ததை தொடர்ந்து இந்த கட்டுப்பாடுகள் நேற்று முன்தினம் முதல் விலக்கி கொள்ளப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

### ஜூலை 3 (1998)



சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.

கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தி.மு.க. கூட்டணியில் இருந்தபோது கொள்கை உறுதியோடு இருந்தவர்கள்!

# த.வெ.க.வில் இணைந்த கட்சிகள் கொள்கையோடு இருக்குமா?

## பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, ஜூலை 3 - த.வெ.க.வில் இணையும் கட்சிகள் தி.மு.க. கூட்டணியில் இருந்தது போல் கொள்கை உறுதியோடு இருப்பார்களா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி தொடர்வதற்கு துணை நிற்கின்ற அரசியல் கட்சிகள் த.வெ.க. தலைமையில் புதிய கூட்டணி அமைப்பது குறித்து இன்று (01.07.2026 )கூடி ஆலோசிக்க உள்ளனர்.

தற்போது தமிழ்நாட்டின் முக்கிய பிரச்சினைகளான சிறுபான்மையினர் கல்வி நிறு வனங்களை ஒழிப்பதற்கு ஒன்றிய அரசு கொண்டு வரும் CIRA மசோதா, முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத இட ஒதுக்கீடு நீதிமன்றம் மூலம் பறிப்பு, CBSE பள்ளிகள் மூலம் இந்தி, சமஸ்கிருதம் மொழிகள் திணிப்பு, பாராளுமன்ற தொகுதி மறுவரையறை மசோதா, தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணி நிரந்தரம், திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் விவகாரம், மேகதாது விவகாரம் மற்றும் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பதவியை ராஜினாமா செய்து விட்டு த.வெ.க.வில் இணைவது குறித்த விவகாரங்களில் த.வெ.க.நிலையை தெளிவுபடுத்த இவர்கள் வற்புறுத்துவார்களா?

கூட்டணியை உறுதிப்படுத்தும் முன் இவை அடங்கிய குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்குவார்களா? அல்லது த.வெ.க.ஆட்சியும், கட்சியும் எதைச் செய்தாலும் தலையாட்டுவோம் என்று முடிவெடுப்பார்களா? தி.மு.க. கூட்டணியில் இருந்தது போல் கொள்கை உறுதியோடு இருப்பார்களா? அல்லது கொள்கைகளை காற்றில் பறக்க விடுவார்களா? தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் பா.ஜ.க.வின் நிழல் ஆட்சி தான் என்பதை இந்த கூட்டணி கட்சிகள் உணர்வார்களா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளார்.

### திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளரிடம்

# மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. கோரிக்கை மனு!

## புதிய பேருந்துகள் இயக்க வலியுறுத்தல்!

தென்காசி, ஜூலை 3 - தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் 30.06.2026 அன்று திருநெல்வேலி அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் சிவகுமார் நேரில் சந்தித்து தொகுதி மக்களின் கோரிக்கைகள் தொடர்பான புதிய பேருந்து வசதி, நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்த மனுவை கொடுத்தார்.

அந்த கோரிக்கை மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

முத்தம்மாள்புரம், மாவிலித்து, அழகப்பபுரம், வேதபுதூர், அய்யாபுரம், மின்நகர், அங்கராயன்குளம், ஆழ்வார்குறிச்சி, அரியப்புரம், இரட்டை குளம், துரைச்சாமிபுரம், பூப்பாண்டிபுரம், சுப்பையா புரம், கருவந்தா, உச்சி பொத்தை ஆகிய ஊர்களில் இருந்து சுரண்டை, தென்காசி, சங்கரன்கோவில், திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்கு பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ, மாணவிகள், பொதுமக்கள் சென்று வர ஏதுவாக புதிய பேருந்து வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும்.

மேலும் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் அதே வழிதடங்களில் இயக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும் வலியுறுத்தியுள்ளார்.

மனுவை பெற்றுக் கொண்ட பொது மேலாளர் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை விரைவாக எடுப்பதாக உறுதி அளித்தார்.

அப்போது மாநில தொ.மு.ச. பேரவை துணைத் தலைவரும் திருநெல்வேலி மண்டல தொ.மு.ச.பொதுச் செயலாளருமான தர்மன், மண்டல தொ.மு.ச. தலைவர் முருகன், முன்னாள் சிக்கன நாணய சங்கத் தலைவர் மகா விஷ்ணு, தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மா.முத்துக்குமார், சாய்ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நடவடிக்கைக்கு கண்டனம்!

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை!

சென்னை, ஜூலை 3 - பத்திரிகையாளரை கீழ்த்தரமாகவும் அச்சுறுத்தும் வகையிலும் பேசிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நடவடிக்கையை சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) வன்மையாக கண்டிக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே, நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களை சந்தித்தார். அந்த சந்திப்பின்போது சமீபத்தில் திமுக கூட்டணி யிலிருந்து மதிமுக வெளியேறியது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஒருகட்டத்தில் கேள்வி எழுப்பிய ஒரு பத்திரிகையாளரிடம் வைகோ அவர்கள் நேரடியாக வாதம் செய்ய ஆரம்பித்தார். அப்போது, "யார் நீ? எந்த பத்திரிகை என்று மரியாதை குறைவாக பேசியுள்ளார். "நீங்க மஞ்சள் பத்திரிகையா? திட்டமிட்டு வந்திருக்கீங்க, யார் உங்கள ஏவிவிட்டது?" என்று பத்திரிகையாளரை மிரட்டும் வகையில் பேசியுள்ளார்.

மேலும், "நீங்க திட்டமிட்டு குழப்பம் செய்வதற்காக இங்கே வந்திருக்கீங்க" என்று வைகோ கூறியதும் அங்கு கூடியிருந்த மதிமுகவினர் கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரை கோபமாக பேசிக்கொண்டே அவரை நோக்கி முன்னேறியுள்ளனர்.

இப்படிப்பட்ட சூழலில், தொண்டர்களை தடுத்து நிறுத்தாமல் அவர்களை மேலும் தூண்டிவிடும் வகையில் பத்திரிகையாளரை சுட்டிக்காட்டி "வெளிய அனுப்பு, வெளியே அனுப்பு" என்று வைகோ தொண்டர்களிடம் கூறியுள்ளார்.

இதைத்தொடர்ந்து தொண்டர்கள் பத்திரிகையாளரை நோக்கி மேலும் முன்னேறி வரவே, அங்கு கூடியிருந்த சக பத்திரிகையாளர்கள் மற்றும் காவல்துறையினர் அந்த பத்திரிகையாளரை பாதுகாத்துள்ளனர். அரசியிலில் பழுத்த அனுபவம் பெற்ற வைகோ, பத்திரிகையாளர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்வது இது முதல் முறையல்ல.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முன்பு எப்போது நிகழ்ந்திராத பல நடந்து வருகிறது.

இதை பற்றி கேள்வி எழுப்ப வேண்டியது பத்திரிகையாளர்களின் கடமை. இதற்கு பதில் சொல்ல விருப்பம் இல்லை என்றால், பதில் சொல்லாமல் கடந்து செல்வது அவரவர் உரிமை.

ஆனால், கேள்வியே கேட்கக் கூடாது என்று பத்திரிகையாளர்களிடம் அநாகரிகமாகவும்,ிட அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, அரசியல்வாதி வைகோ, இதுபோன்ற நடவடிக்கையில் இனி ஈடுபடக் கூடாது என்றும், சென்னை பத்திரிகையாளர் சங்கம் ((MUJ) அவரிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.



பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியை அமைச்சர் கில்லி சரத்தை பதவி நீக்க வலியுறுத்தி தாம்பரத்தில் நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டு கைதான தி.மு.க. மாணவரணியினர் மாத்திரை நுணுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.